# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,913 – 1964 ජනවාරි 10 වැනි සිකුරාදා – 1964.1.10

13,913 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு சனவரி மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 9 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | எல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 10 | நாணுவிதம் .. .. .. | 11 |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன திணைக்களம்

**ராஜாங்கணை உட்பிரிவு**

ராசாங்கணைத் திட்டத்தில் தண்ணீர் குழாய்கள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரத்தில் உள்ள வடமத்திய பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 5 ம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின் உடனே திறக்கப்படும்—கேள்விப்பத்திர இலக்கம் RLI.

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 45,000 த்துக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் ராஜாங்கணை தம்புத்தகமத்திலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு தை மாசம் 31 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன் வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வளங்கு முன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50/- கேள்விக்கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுககொள்ளலாம்.

சி. சி. ரி. பெனன்டோ,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
ராசாங்கணை உட்பிரிவு.

தம்புத்தகம,
1963 ம் ஆ டிசம்பர் மீ 31 ந் உ.

1–216—10.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,913

---

### முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 17 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 11 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னுட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஆ தை (சனவரி) மீ 3 ந் உ.*

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### யாழ்ப்பாண உப பிரிவு

நீர்ப்பாசன இலாகா யாழ்ப்பாண உபபிரிவு பகுதிக்குச் சேர்ந்த அக்கராயன் குளத்தின் வலது பக்க பெரும் வாய்க்காலின் 3 ம் கட்டையில் 330 அடி ஸ்லின் மாதிரி வானும் நீரிடைப் பாதையும் கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வட பகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பதினோராந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 45,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இச் கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் கிளிநொச்சியிலுள்ள யாழ்ப்பாண உபபிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன் வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இந்தத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பக்கத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்களை வழங்குவதற்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50 கேள்விக்கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக் கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காட்டிநாலும் போதுமானது. இக்கேள்விகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. செல்லப்பா,
யாழ்ப்பாண உப பிரிவு,
நீர்ப்பாசன பொறியியலாளர்.

கிளிநொச்சி,
1963 ம் ஆண்டு டிசெம்பர் மீ 23 ந் வ.

1–304—10.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,913

---

## கடற்றொழிற் பகுதி

### இன்ரநாஷனல் வான் ஒன்றைப் பழுது பார்ப்பதற்கான கேள்வி விலைகள்

காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்கள், இன்ரநாஷனல் வான் ஒன்றைப் பழுது பார்ப்பதற்கான கேள்வி விலைகளை 1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிவரையும் ஏற்றுக்கொள்வார்.

கேள்விவைப்புப் பணம் ரூபா 25.

டி. ஆர். எல். பாலசூரிய,
கடற்றொழில் அதிபர்.

காலிமுகம்,
கொழும்பு,
1963 ம் ஆண்டு மார்கழி மீ 30 ந் வ.
1–187—10.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,913

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் 1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ம் திகதி புதன்கிழமை மு. ப. 10.00 மணி வரை, அவிசாவலை II ம் தர டிப்போவிற்கு வீதிகளும் கால்வாய்களும் அமைப்பதற்காக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள இ. போ. ச. பிரதிப் பிரதம பொறியியலாளருக்கு (சிவில்) விண்ணப்பிக்கவும். ரூபா 40,000/- க்கும் மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக்குப் பதிவுசெய்யப்பட்ட அரசாங்க கொந்தராத்துக்காரர்களும், இ. போ. ச. கொந்தராத்துக்காரர்களுமே கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். அவர்களுடைய சான்றோலைகள் பிரதிப் பிரதம பொறியியலாளருக்கு (சிவில்) பரிசோதனைக்குக் காட்டப்பட்டு, அவை அங்கீகரிக்கப்பட்டால் கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/- ஐக் கட்டவேண்டும்.

கட்டுப்பணப் பற்றுச்சீட்டைக் காட்டுவதின் பேரில் பிரதிப் பிரதம பொறியியலாளர் (சிவில்) 1964 ம் ஆண்டு, ஜனவரி மாதம் 25 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை, கேள்விப்பத்திரங்களை வழங்குவார். இவரிடமிருந்து பெறும் பத்திரங்களிலேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாராஹேன்பிட்டி, கொழும்பு 5,
1963 ம் ஆண்டு டிசம்பர் மீ 31 ந் வ.

1–1305—10.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,913

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## இலங்கை அரச கடற்படை

உபயோகமற்ற டயர்களுக்கான ஏலவிற்பனை 1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு. இலங்கை அரச கடற்படைத் தலைமைக்காரியாலயத்தைச் சேர்ந்த வேலைத் தளப்பகுதியில் நடைபெறும்.

2. டயர்களை 16.1.64 ல் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

3. ஏலம் முடிவடைந்ததும் அதற்கான முழுப்பணமும் உடனே கட்ட வேண்டும்.

4. பொருட்கள் யாவும் அன்று பி. ப. 3.00 மணிக்கு முன்பு அப்புறப்படுத்தல் வேண்டும்.

1–324—10.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,913

## நாணுவிதம்

### புதிய சட்ட அறிக்கைகள் (ஆங்கிலத்தில் மாத்திரம்) புதிய கட்டணங்கள்

புதிய சட்ட அறிக்கைகளின் சந்தா விபரமும் அவற்றின் தனிப் பகுதியின் விலைவிபரமும் பொதுசனங்களின் அறிவித்தலுக்காகக் கீழே தரப்பட்டிருக்கின்றன :—

| | உள்ளூர் ரூ. | ச. | | பிறநாடு ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| 1. தொகுதி 66 லிருந்து தொடங்கும் புதிய சட்ட அறிக்கைகளின் சந்தா .. | 27 | 0 | .. | 28 | 0 |
| 2. தொகுதி 65 தொடக்கம் புதிய சட்ட அறிக்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் .. | 1 | 0 | .. | — | |
| இதற்கு முந்திய பகுதி ஒவ்வொன்றும் .. | 0 | 75 | .. | — | |
| 3. புத்தகமாகக் கட்டப் பெருத முழுத் தொகுதி ஒவ்வொன்றும் 18.11.63 லிருந்து .. | 25 | 0 | .. | — | |

28.7.61 ல் வெளியிடப்பட்ட 12,562 என்ற இலக்கத்தைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் தகவற் பகுதி அதிபதியால் வெளியிடப்பட்ட அறிவித்தல் மேற்கண்டவாறு திருத்தப்பட்டிருக்கின்றது.

S. B. சேனநாயக,
வானொலி தகவற் பகுதித் தலைமை அதிபதி.

1-339—10.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,913

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்க்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்டேர்ண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.